**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**

**OS No: 108/2016**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வா.சா. 1 (பழனிசாமி) நாள் 24.02.2026**

குறுக்கு விசாரணை ( 9 ம் பிரதிவாதி தரப்பில்)

தாவா சொத்தின் பழைய கச 165. அதன் மொத்த விஸ்தீரணம் 9 ஏக்கர் 73 செண்ட் என்றால் சரி. 27.04.1937 அன்று பதிவு ஆவணத்தின்அடிப்படையில் ஒரு பழனிசாமி கவுண்டர் மக்கள் பழனிசாமி கவுண்டர் மற்றும் அம்மாசை கவுண்டர் ஆகியோர் ஏக்கர் 4.86-1/2 விஸ்தீரணத்தை செக்குபந்தி கண்டு கிரயம பெற்றுள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 21.06.1956 ல் பழனிசாமி கவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொதுவில் பாதியை அம்மாசை கவுண்டர் மகன் ராமசாமிக்கும் சென்னிமலை கவுண்டருக்கும் விற்பனை செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. ஏக்கர் 4.86-1/2 ன் தென்புறம் உள்ள சொத்துககள் முழுவதும் அம்மாசை கவுண்டர் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. காலம்தொட்டு அவர்கள் செக்குபந்தி கண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இந்த விவரம் எனக்கு நேரில் தெரியும் என்றும் வேண்டுமென்றே பொதுவில் அனுபவிப்பதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 21.06.1956 ல் பிசாஆ 3 ன் அடிப்படையில் அம்மாசை கவுண்டரும் அவர் மக்களும் பாகம்பிரித்துககொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதில் ஏ செட்டியூல் சொத்தாக அயிட்டம் 1,2 தாக்குகளாக சொத்துககள் ஒதுக்கப்பட்டு அவரது ஆயுட்காலம் வரை அனுபவித்து வந்து பின்னிட்டு ஆயுட்காலத்திற்கு பின்னிட்டு அவரின் மக்கள் அனுபவித்து வரவேண்டியது என

சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.அந்த பாகப்பிரிவினையில் ராமசாமிக்கு பி செட்டியூலாகவும் சென்னிமலை கவுண்டருக்கு சி செட்டியூல் ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அம்மாசை கவுண்டரும் அவர் மனைவி இறந்த பின் அவரது மக்கள் செக்குபந்தி கண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிசாஆ 4 மற்றும் 14 ஆவணங்கள் அடிப்படையில் சென்னிமலை கவுண்டர் தனது சகோதரர் ராமசாமிக்கு செக்குபந்தி கண்டு சொத்தை விற்பனை செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த கிரயத்தின்மூலம் ராமசாமி கவுண்டர் செக்குபந்தி கண்டு தென்புற சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டர் பிசாஆ 5 மற்றும் 15 ஆவணங்கள் அடிப்படையில் அவரது மகள் 7ம் பிரதிவாதிக்கு செக்குபந்தி கண்டு செட்டில்மெண்ட் ஏற்படுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீதமுள்ள பூமி ராமசாமி வசமே உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமசாமி இறத்தது பின்னிட்டு அவரது வாரிசுகள் பிசாஆ 6 அடிப்படையில் மீதமுள்ள சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினையில் ஏ செட்டியூலாக 6ம் பிரதிவாதி கண்ணம்மாளுக்கும் பி செட்டியூலாக 7ம் பிரதிவாதி ஜெயலட்சுமிக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்களும் அவர்களது பாகம் வரை செக்குபந்தி கண்டு தான் அனுபவித்து வந்தனர் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தென்புற பகுதிக்கு ரீச 177/1 மற்றும் 2, வடபுற பகுதிக்கு ரீச 178/1 மற்றும் 2 என்றால் சரிதான். ரீசர்வே காலத்தில் யார் பூமியை அனுபவித்தார்களோ அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி அவரது மக்களுடன் சேர்ந்து 8ம் பிரதிவாதிக்கு 23.03.2016 ல் வாசாஆ 7 அடிப்படையில் கிரயம் கொடுத்துள்ளாா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 7, 8 பிரதிவாதிகள் 10.04.2016 அன்று ஒரு பரிவர்தனை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதியிடமிருந்து 9ம் பிரதிவாதி 3.2.2021 ல் செக்குபந்தி கண்டு ஏக்கர் 2.53-1/2 கிரயம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 9ம் பிரதிவாதி கிரயத்திற்கு முன்பு வில்லங்கம் பார்த்தும் உரிய விசாரணை மேற்கொண்டும தான் கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல. 9ம் பிரதிவாதி நல்லெண்ண கிரய தாரர் என்றும் அவருக்கு வழகு நிலுவையில் உள்ள விவரம் தெரியாது என்றால் சரியல்ல. நானும், எனக்கு கிரயம் கொடுத்த முன்னோர்களும் தாவா சொத்தின் வடபுற பகுதியை தான் அனுபவித்து வந்தோம் என்றால் சரியல்ல. கடந்த 80 ஆண்டுகளாக பாகம் பிரிக்கப்பட்ட சொத்தை நான் பிரிக்க வேண்டும் என தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் தென்கிழக்கு மூலையில் சுமார் 1 ஏக்கர் அளவிற்கு கரடாக உள்ளது என்றால் பாறை உள்ளது, ஆனால் அந்த விஸ்தீரணத்திற்கு இல்லை. அந்த பாறை பகுதியில் 7-8 குடும்பத்தினார் வசித்து வருகின்றனர் என்றால் ராமசாமி அவரது பண்ணையத்தில் வேலை செய்வர்களுக்கு கட்டி கொடுத்துள்ளதாக கூறுகிறார். அவர்களை தரப்பினராகவும் வீடுகளை சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும் அவர்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 177/1,2 ல் ஏற்படும் கிரயங்களை தடுப்பதற்காகவும் அதன் மூலம் ஆதாயம் பெற வேண்டி நான் மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 177/1 மற்றும் 2 , 177/1 ஏ மற்றும் 1 பி மற்றும் 177/2 ஏ மற்றும் 2 பி என உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 177/1 பி ல் ஒரு கிணறு மற்றும் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் உள்ள மின் இணைப்புகள் எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். அந்த வீட்டில் எனக்கு பங்கு எதுவுமில்லை. கிணற்றிலும் பங்கில்லை என்றால் சரியல்ல. 9ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தை செக்குபந்தி கண்டு அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் 2/16 பாகம்

கோருகிறேன் என்றால் சரிதான். என் தகப்பனார் வாசாஆ1ன்படி 1/8 பாகமும், வாசாஆ 3ம் படி நான் 1/8 கிரயம பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் தலா 1/8 பாகம் கிரயம் பெற்றதாக சொல்கிறேன் என்றால சரிதான். 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு பொய்யானது என்றும், மேசாடி லாபம் பெற தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1930 ம் ஆண்டே பாகஸ்தர்களிடையே வாய்மொழியாக பாகம் ஏற்பட்டுவிட்டது என்றம் அதன் தொடர்ச்சியாக தான் 1937 ல எழுத்து மூல பாகப்பிரிவினை செக்குபந்தி கண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கிரயம் பெறுவதற்கு 40ஆண்டுகளுக்குமுன்பாகவே செக்குபந்தி கண்டு கிரயம் ஏற்பட்டுள்ளதை தெரிந்தே நான் பொதுவில் கிரயம் பெ்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் பொதுவில் அனுபவித்து வருவதாக சொல்வது தவறு என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.02.24 17:33:25 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS